**ஜனவரி – 22**

# TNPSC துளிகள்

- நேபாளத்தில் சுமார் 900 மெகாவாட் அளவு திறன் கொண்ட மேல் மட்ட கர்னாலி நீர்மின் நிலையத்தினை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் லிமிடெட் (IREDA) ஆனது , நேபாள மின்சார ஆணையத்துடன் (NEA) ஒரு கூட்டு துணிகர முன்னெடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- தகவல் தொலைதொடர்பு மேம்பாட்டு மையம் ஆனது, "அலைக்கற்றைப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான அகலப்பட்டை வரிசை அலைக்கற்றை-உணர்வி ASIC-சில்லு" உருவாக்கத்திற்காக வேண்டி ஜம்முவின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்து மண்டியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ஜெர்மனியின் பிராங்பர்ட் நகரில் நடைபெற்று வரும் 2025 ஆம் ஆண்டு சர்வதேச உள்நாட்டு மற்றும் ஒப்பந்த ஜவுளி வர்த்தக கண்காட்சியில் இந்திய அரங்கம் திறக்கப் பட்டுள்ளது.
- உலகின் முதல் 52x52x52 அளவிலான 'மகாமிர்துஞ்சய யந்திரம்' ஆனது உத்தரப் பிரதேச மாநிலத்தின் பிரயாக்ராஜில் உள்ள ஜுன்சி ஹவேலிஸ் என்னுமிடத்தில் உள்ள தபோவன் ஆசிரமத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில் நெகிழிப் பயன்பாடு இல்லாத மகா கும்ப மேளாவிற்காக நெகிழிப் பைகள் மற்றும் ஒரு முறை பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பொருட்களின் பயன்பாட்டினைக் குறைப்பதற்காக "ஒரு தட்டு, ஒரு பை" பிரச்சாரம் தொடங்கப் பட்டு உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவு கொள்கைக்கான பல்வேறு பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் பணிக்காக 16 பேர் கொண்ட ஒரு குழுவை அமைப்பதாக மகாராஷ்டிரா அறிவித்துள்ளது.
- அசாம் மாநில காவல்துறைத் தலைவர் ஞானேந்திர பிரதாப் சிங் மத்திய சேமக் காவல் படையின் (CRPF) தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## NBM 2.0 & சஞ்சார் சாத்தி செயலி




- மத்திய அரசானது, சஞ்சார் சாத்தி கைபேசி செயலி மற்றும் தேசிய அகலப்பட்டை

வரிசை திட்டம் (NBM) 2.0 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது எண்ணிம பாரத் நிதியின் (DBN) கீழ் நிதியுதவி பெற்ற 4G கைபேசி தளங்களில் பல்வேறு சேவை நிறுவனங்களிடையே வலையமைப்பு பகிர்வு வசதியையும் தொடங்கி வைத்துள்ளது.
- சஞ்சார் சாத்தி கைபேசி செயலி என்பது தொலைத்தொடர்பு பாதுகாப்பை மிக நன்கு வலுப்படுத்தவும் குடிமக்களுக்கு அதிகாரமளிப்பதற்காகவும் என வடிவமைக்கப்பட்ட ஒரு பயனருக்கு ஏற்ற வகையிலான தளமாகும்.
- NBM 2.0 ஆனது 1.7 லட்சம் கிராமங்களுக்கு அகலப்பட்டை வரிசை இணைய சேவை இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்னர் USOF என்று அழைக்கப்பட்ட DBN ஆனது, அதன் விரிவான கைபேசி அலைபரப்பு கோபுர அமைப்புத் திட்டங்கள் மூலம் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் தொலைத்தொடர்பு இடைவெளியைக் குறைப்பதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.
- DBN 4G தளங்கள் ஆனது பயனர்கள் பல தொலைத்தொடர்பு வழங்குநர்களிடமிருந்து (BSNL, Airtel, Reliance) 4G சேவைகளை அணுக அனுமதிக்கிறது.

## நம்பகமான பயணியர் திட்டம்




- மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஐதராபாத், கொச்சி மற்றும் அகமதாபாத் விமான நிலையங்களில் விரைவான குடியுரிமைப் பரிசோதனை சேவை - நம்பகமான பயணியர் திட்டத்தினை (FTI-TTP) மத்திய அரசு தொடங்கி வைத்துள்ளது.
- இந்திய நாட்டினர் மற்றும் வெளிநாட்டுக் குடியுரிமை கொண்ட இந்திய பயணிகளுக்கு (OCI) மிகவும் விரைவான, சிக்கலற்ற மற்றும் பாதுகாப்பான குடியேற்ற அனுமதியுடன் சர்வதேசப் போக்குவரத்தினை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கட்டாயச் சரிபார்ப்புக்குப் பிறகு, 'நம்பகமானப் பயணியர்' என்ற வெள்ளைப் பட்டியல் உருவாக்கப் பட்டு மின்னணுச் சோதனை வாயில்களில் பயன்படுத்தப்படுவதற்கு என செயல்படுத்தப்படும்.
- இதில் பதிவு செய்யப்பட்ட பயணிகள், அங்குள்ள மின்னணு நுழைவாயில்களில் விமான நிறுவனங்களால் வழங்கப்பட்ட நுழைவுச் சீட்டுகளை ஊடறி செய்து, பின்னர் தங்களின் கடவுச் சீட்டினை ஊடறி செய்ய வேண்டும்.

- பின் மின்னணு நுழைவாயில்களில் பயணிகளின் உயிரளவியல் தரவுகள் அங்கீகரிக்கப் படும்.
- அத்தகைய ஒரு அங்கீகாரத்தின் பேரில், மின்னணு நுழைவு வாயில் ஆனது தானாகவே திறக்கப் பட்டு, குடியேற்ற அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## லா பெரூஸ் ‘25 பன்னாட்டு கடற்படைப் பயிற்சி




- இந்தியக் கடற்படையானது, அமெரிக்கா மற்றும் பிரான்சு உட்பட எட்டு நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்து ஒரு மாபெரும் போர்ப் பயிற்சியில் பங்கேற்று வருகிறது.
- இந்தியப் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல் இடையிலான நீர்ச்சந்தி, மலாக்கா, சுண்டா மற்றும் லோம்போக் நீர்ச்சந்தியில் இந்தக் கடற்படைப் பயிற்சியானது நடந்து வருகிறது.
- இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளோடு சேர்ந்து, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய சில நாடுகளின் கடற்படைகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

# பொருளாதாரச் செய்திகள்


## FEMA விதிமுறைகள் புதுப்பிப்பு 2025

- இந்திய ரிசர்வ் வங்கியானது, மத்திய அரசாங்கத்துடன் இணைந்து, 1999 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தின் கீழ் தற்போதைய விதிமுறைகளை மறு மதிப்பாய்வு செய்துள்ளது.
- இது ரூபாய் மதிப்பில் மற்றும் பிற உள்நாட்டு அல்லது தேசிய நாணயங்களின் மதிப்பில் பன்னாட்டுப் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட இடையீட்டு/தரக வங்கிகளின் வெளிநாட்டுக் கிளைகள் தற்போது இந்தியாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் வசிப்பவர்களுக்கு இந்திய ரூபாய் மீதான மதிப்பிலான கணக்குகளைத் தொடங்க இயலும்.
- இந்தியாவில் வசிப்பவர்களுடன் அனுமதிக்கப்பட்ட அனைத்து நடப்பு மற்றும் மூலதனக் கணக்குப் பரிவர்த்தனைகளையும் மேற்கொள்ள இது உதவுகிறது.

- இந்தியாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் வசிப்பவர்கள் தாங்கள் திருப்பி அனுப்பக் கூடிய ரூபாய் மதிப்பிலான கணக்குகளில் உள்ள கை இருப்புகளைப் பயன்படுத்தி, பிற வெளிநாட்டு நபர்களுடனான சட்டப்பூர்வப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம்.
- இந்தியாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் வசிப்பவர்கள் தாங்கள் திருப்பி அனுப்பக் கூடிய ரூபாய் மதிப்பிலான இந்தக் கணக்கு நிலுவைகளை கடன் சாராத அம்சங்களில் மேற்கொள்ளப்படும் அந்நிய நேரடி முதலீடு உள்ளிட்ட வெளிநாட்டு முதலீடுகளுக்குப் பயன்படுத்தலாம்.
- இதன்படி இந்திய ஏற்றுமதியாளர்கள் தற்போது வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் தொடங்கி வர்த்தக பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும், ஏற்றுமதி வருமானத்தைப் பெறவும், இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்தவும் அனுமதிக்கப்படுகின்றது.




## இந்திய ரிசர்வ் வங்கி - தினசரி VRR ஏலங்கள்





- வங்கி அமைப்புகளின் பணப்புழக்கத்தினை அதிகரிப்பதற்கு, தினசரி அடிப்படையில் மாறுநிலை ரெப்போ விகித ஏலங்களை நடத்துவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி முடிவு

செய்துள்ளது.

- VRR ஏலங்கள் ஆனது ஒவ்வொரு நாளும் காலை 10:00 மணி முதல் காலை 10:30 மணி வரை நடத்தப்படும் என்பதோடு மறுநாள் இது மாற்றி நடத்தப்படும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கிகள் பற்றாக்குறை நிலையில் உள்ள போது பணப் புழக்கத்தினைச் செலுத்துவதற்காக வழக்கமாக VRR ஏலங்களை நடத்துகிறது.

### 2024-25 ஆம் ஆண்டிற்கான NBFC மேல் அடுக்கு பட்டியல்





- 2024-25 ஆம் ஆண்டிற்கான மேலடுக்கு பிரிவில் உள்ள வங்கி சாரா நிதி நிறுவனங்களின் (NBFCs) பட்டியலை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் தேதியன்று NBFC நிறுவனங்களுக்கான திருத்தப்பட்ட ஒரு ஒழுங்குமுறைக் கட்டமைப்பான மற்றும் நிலை அடிப்படையிலான ஒழுங்குமுறையினை (SBR) வெளியிட்டது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது NBFC நிறுவனங்களை அடிப்படை அடுக்கு (NBFC-BL), நடுத்தர அடுக்கு (NBFC-ML), மேல் அடுக்கு (NBFC-UL) மற்றும் முதன்மை அடுக்கு (NBFC-TL) என நன்கு வகைப்படுத்துகிறது.
- இது மேலடுக்கில் உள்ள NBFC நிறுவனங்களை அவற்றின் சொத்து அளவு மற்றும் மதிப்பு முறையின்படி அடையாளம் காணும் வழிமுறையையும் வழங்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### வீணாகும் வெப்ப ஆற்றல் மாற்றம்


- பெங்களூருவின் JNCASR (Jawaharlal Nehru Centre for Advanced Scientific Research) என்ற ஒரு நிறுவனமானது, தேவையற்ற வெப்பத்தினை ஆற்றலாக மாற்றும் திறன் கொண்ட ஓர் அதிநவீனப் பொருளை உருவாக்கியுள்ளது.
- வெவ்வேறு அடுக்கு சேர்மங்களின் தனித்துவமான வகுப்பான ஃபெரே கிரிஸ்டல்களில் முறுக்கி அமைக்கப்பட்ட அடுக்குகளை உட்செலுத்துவதன் மூலம் இக்குழு ஒரு புதிய வெப்ப மின் பொருளை உருவாக்கியுள்ளது.
- டின் செலினைடு (SnSe) அடிப்படையிலான பொருள் ஆனது, n-வகை பொருட்களைக் கொண்டதாக கூறப்படும் 2.3 என்ற அதிகபட்ச வெப்ப மின் மதிப்பினைக் கொண்டு உள்ளது.

- பயன்படுத்தப்படும் அனைத்து ஆற்றலிலும் சுமார் 65 சதவீதம் ஆனது இயற்கையில் வெப்பமாக இழக்கப்படுவதால், வெப்ப மின் பொருட்கள் $CO_2$ போன்ற மிகவும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை வெளியிடாமல் தேவையற்ற வெப்பத்தினை மின்சாரமாக மாற்றுவதன் மூலம் ஒரு நிலையான தீர்வை வழங்குகின்றன.
- ஃபெரே கிரிஸ்டல்கள் வெவ்வேறு அடுக்குச் சேர்மங்களின் (MLCs) துணைப் பிரிவாகும், என்பதோடு அவை வெவ்வேறுக் கட்டமைப்புகளின் மாற்று அடுக்குகளால் ஆன இரு பரிமாண மீப்படிக அணியாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## வெங்காயத் தாமரை ஊடுருவல் – கென்யா





- உலகின் மிகவும் பரவலான ஊடுருவல் அயல் இனமான வெங்காயத் தாமரையானது,

கென்யாவின் நைரோபி நகரில் உள்ள நைவாஷா ஏரி முழுவதும் பரவிக் காணப் படுகிறது.

- வெங்காயத் தாமரை ஆனது தென் அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்டதோடு அவை, 1980 ஆம் ஆண்டுகளில் கென்யாவில் அறிமுகப் படுத்தப்பட்டதாகக் கூறப் படுகிறது.
- வெங்காயத் தாமரை ஆனது அறிவியல் ரீதியாக இச்சோர்னியா கிராசிப்ஸ் என்று அழைக்கப்படுகிறது.
- இது இந்தியா உட்பட தெற்காசியா முழுவதும் உள்ள நீர்நிலைகளில் மிகப் பொதுவாக காணப் படும் ஒரு நீர்வாழ் களை தாவரமாகும்.
- இது பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் போது தென் அமெரிக்காவிலிருந்து ஒரு அலங்கார நீர்வாழ் தாவரமாக இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய இணைய வெளிப் பாதுகாப்புக் கண்ணோட்டம் 2025





- இது அசெஞ்சர் நிறுவனத்துடன் இணைந்து உலகப் பொருளாதார மன்றத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இதன்படி வளர்ந்து வரும் 8% திறன் இடைவெளி காரணமாக, மூன்றில் இரண்டு பங்கு நிறுவனங்கள் பாதுகாப்புத் தேவைகளை திறம்பட நிவர்த்தி செய்ய முடியாமல் போகிறது.
- 2.8 மில்லியன் முதல் 4.8 மில்லியன் இணைய வெளிப் பாதுகாப்பு நிபுணர்களுக்கான பற்றாக்குறை உள்ளது.
- பொதுத்துறை நிறுவனங்களில் சுமார் 49% போதுமான இணைய வெளிப் பாதுகாப்பு திறன் இல்லாத நிலையில் உள்ளன.
- ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் காணப்படும் சுமார் 15 சதவீதத்துடன் ஒப்பிடச் செய்யும் போது, இலத்தீன் அமெரிக்காவில் சுமார் 42% மற்றும் ஆப்பிரிக்காவில் 36%

பேர் இணைய வெளிப் பாதுகாப்பு தயார்நிலையில் நம்பிக்கை இல்லாமல் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## வாட்நகர் தொல்பொருள் அனுபவ அருங்காட்சியகம்

- இந்த அருங்காட்சியகம் ஆனது, அந்த நகரத்தின் சுமார் 2,500 ஆண்டுகால வரலாற்றை ஒரு உள்ளார்ந்த மற்றும் ஊடாடும் அனுபவத்தின் மூலம் ஒரு விரிவான காட்சியினை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சுமார் 5,000க்கும் மேற்பட்ட கலைப் பொருட்களை நன்கு காட்சிப்படுத்துகின்ற இந்த அருங்காட்சியகம் ஆனது, அந்நகரத்தின் கலாச்சார விவரிப்பு முறையில் உள்ளார்ந்த காட்சியினை வழங்குகிறது.
- வாட்நகர் ஆனது குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது இந்து, பௌத்தம், சமணம் மற்றும் இஸ்லாமிய கலாச்சாரத் தாக்கங்களின் மிக தனித்துவமானக் கலவைக்குப் பெயர் பெற்றது.




# விளையாட்டு செய்திகள்

## முதலாவது கோ கோ உலகக் கோப்பைப் போட்டி

- முதலாவது கோ கோ உலகக் கோப்பை போட்டியினை (2025) இந்தியா நடத்தியது.
- இந்தப் போட்டியில் 20 ஆடவர் அணிகளும் 19 மகளிர் அணிகளும் பங்கேற்றன.
- நேபாள அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணி

வெற்றி பெற்று கோப்பையினை வென்றது.




# இதரச் செய்திகள்

## உலக நினைவுச்சின்னங்கள் கண்காணிப்பு 2025




- இந்தப் பட்டியலில் 29 நாடுகளைச் சேர்ந்த, நிதி உதவி மற்றும் பாதுகாப்பு தேவை என்று கருதப்படுகின்ற 25 தளங்கள் இடம் பெற்றுள்ளன.
- ஐதராபாத்தில் உள்ள 'முசி நதி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தக் கட்டிடங்கள்' ஆனது 2025 ஆம் ஆண்டு உலக நினைவுச்சின்னங்கள் கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கப் பட்டு உள்ளன.
- குஜராத்தின் 'புஜ் நகரத்தின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நீர் கட்டமைப்புகள்' ஆனது நீர் நெருக்கடி மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக ஆபத்தை எதிர்கொள்ளும் தளங்களின் பட்டியலில் உலக நினைவுச் சின்னங்கள் நிதியத்தின் கண்காணிப்பு அமைப்பினால் பட்டியலிடப்பட்டுள்ள மற்றொரு இந்தியத் தளமாகும்.

## குளோபல் லைட்ஹவுஸ் நெட்வொர்க் 2025

- தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூர் நகரில் உள்ள CEAT தொழிற்சாலை மற்றும் அசாமின் டின்சுகியாவில் உள்ள இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் நிறுவனம் ஆகியவை உலகப்

பொருளாதார மன்றத்தின் குளோபல் லைட்ஹவுஸ் நெட்வொர்க்கில் இணைந்துள்ளன.

- இது உற்பத்தியில், மிகவும் அதிநவீன நான்காவது தொழில்துறைப் புரட்சி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் மிகவும் முன்னோடியாக இருக்கும் தொழில்துறை நிறுவனங்களின் சமூகமாகும்.
- WEF நிறுவனமானது இந்த வலையமைப்பில் 18 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது என்ற நிலையில் அவற்றுள் இரண்டு நிறுவனங்கள் இந்திய நிறுவனங்கள் ஆகும்.




## அல்சைமர் நோய்க்கான ஆயுர்வேத சிகிச்சை

- அமிலாய்டு பீட்டா திரள் செயல்முறையின் பெரும் தீங்கு விளைவிக்கும் விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்காக என வேதியியல் ரீதியாக உருவாக்கப்பட்ட தீர்வுகளுடன் ஆயுர்வேத மருத்துவத்தின் திறனையும் ஆராய்ச்சியாளர்கள் வெளிக் கொணர்ந்து உள்ளனர்.
- இது அல்சைமர் பாதிப்பு நிலையினை மேற்கொண்டு உருவாகச் செய்வதற்கான ஒரு முக்கியக் காரணியாகும்.
- அல்சைமர் நோயானது, பெரும்பாலும் மூளையில் அமிலாய்டு புரதங்களின் திரளாக்க செயல்முறையுடன் தொடர்புடையது என்பதோடு இது உடலின் மிகவும் சாதாரணச் செயல்பாட்டை சீர்குலைக்கும் நச்சுக் கட்டிகளை உருவாக்குகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★